## 07. கட்டிட அனுமதி செயல்முறையில் வேறு அவசியமான மற்ற பங்குதாரர்க-ளின் அனுமதி பெறப்படுதல் வேண்டுமா?

- ஆம், குறித்த அனுமதிகள் காரணமாக கட்டிட அனுமதியினை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வீதியின் ஓரமாக கட்டிடம் நிர்மாணிக் கப்படுவதாயின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெறப்பட வேண்டும்.
- கடலிலிருந்து 300 மீற்றர்களுக்குள் கட்டிடம் கட்டப்பட வேண்டுமாயின் கரையோர பாது காப்பு திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.
- வயல்நிலங்களில் கட்டிடம் அமைப்பதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.குறித்த அனுமதிகளை விண்ணப்பதாரி பெற்று உள்ளூராட்சிமன்றத்திடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் கட்டிட அனுமதியினை விரைவாக பெற்றுக்கொள்ளமுடியும

## 08. வேறு எவ்வகையான காலதாமதங்கள் கட்டிட அனுமதியைப்பெற்றுக் கொள்ளு வதில் ஏற்படுகின்றது?

தகுதி வாய்ந்த படவரைஞர்கள் மூலம் கட்டிட வரைபடத்தினை வரைதல் வேண்டும். ஆதன்மூலம் பல அடிப்படைப்பிரச்சனைகள் தீர்க்கப்படும். அதே வேளை நில அளவையாளர் தருகின்ற படத்தில் குறித்த காணி தொடர்பாக காணப்படுகின்ற விடயங்களும் காணி உறுதியில் காணப்படுகின்ற காணி தொடர்பான விடயங்களும் ஒத்தவையாக இருத்தல் வேண்டும் இதனை குறித்த விண்ணப்பதாரி உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியால் வழங்கப்படுகின்ற ஆவணங்கள் சரியாக பொருத்தமான திணைக்களங் களின் அனுமதியுடன் வழங்கப்படுமிடத்து கட்டிட அனுமதியை உள்ளூராட்சி மன்றம் 14 நாட்களிற்குள் வழங்குவதற்கு முடியும்.

## 09.எவ்வாறான ஆவணங்கள் விண்ணப்பபடிவத்துடன் இணைக்கப் படல் வேண்டும்?

- கட்டிட வரைபடம்– மூலப் பிரதிகள் –3
- நடப்பு ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு – பிரதி 1
- நில உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை – புகைப்பட பிரதி 1
- 30 ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தாள்கள்– புகைப்படப் பிரதிகள் 1, ஆனால் அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்குக் கிடைக்க வேண்டும்.
- நில அளவைப்படம் – புகைப்பட பிரதி 1, ஆனால் அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும்.
- நிலப் பத்திரம்– புகைப்பட பிரதிகள் 1, ஆனால் அசல் பிரதி முதற்கட்ட சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும்.
- வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ்– பிரதி 1 உபபிரிவிடல் –பிரதி 1
- காணி 6 பேர்ச்களுக்கு குறைவாக இருந்தால் நகர அபிவிருத்தி அதிகாரசபைஅனுமதி பெற வேண்டும் புகைப்பட பிரதிகள்– 3
- 400 மீ2க்கு மேல் நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெறப்பட வேண்டும் – புகைப்பட பிரதி – 3
- நிலம் அரசுக்கு சொந்தமானதாக இருந்தால், பிரதேச செயலகத்திலிருந்து நீண்டகால குத்தகை ஒப்பந்தம் பெறப்பட வேண்டும்.தனியார் அல்லாத நிலத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டு மானால், பிரதேசசெயலக அனுமதி தேவை.



# கட்டிட அனுமதிப்பத்திரம்

Funded by
European Union
UNDP
STRIDE CDLG Capacity Development of Local Governments

## 01.ஏன் நிர்மாணப்பணிகளுக்கு உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்?

ஒவ்வொரு பிரஜையும் இயற்கை மற்றும் கலாச்சார சூழலைப் பாதுகாக்கும் வகையில் சிறந்த வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் அதிகாரப் பகுதிகளுக்குள் அனைத்து கட்டிட நடவடிக கைகளையும் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்து கின்றன. எனவே, கட்டிட நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து நபர்களும் சம்பந்தப்பட்ட உள்ஙராட்சி மன்றத்திடம் அனுமதி பெற வேண்டும்.

## 02.உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதி பெறுதல் சட்டரீதியாக்கப்பட்டுள்ளதா?

ஆம், நகர அதிகார சபையினால் அபிவிருத்தி பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்து பிரதேசங்களின் கீழ் வருகின்ற நிர்மானப்பணி களுக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அதே வேளை ஒரு பகுதி “நகர்ப்புற வளர்ச்சிப் பகுதி“ என அறிவிக் கப்படாவிட்டால், 1915 ஆம் ஆண்டின் வீடு மற்றும் நகரத்தை மேம்படுத்துதல் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

## 03.கட்டிட அனுமதி எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியானதாகும்?

கட்டிட அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும். குறித்த அனுமதி இரு வருடங்களிற்கு நீட்டிக்கப்படலாம்

## 04.கட்டிட அனுமதி மாத்திரம் குறித்த நிர்மாணத்திற்கான சட்ட அங்கிகாரத்தினை பெற்றுத்தருமா?

இல்லை. குறித்த நிர்மாணப்பணிகள் நிறைவுற்றதும் குறித்த கட்டிடத்திற்கான இயைபுச்சான்றிதழ் கட்டாயமாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இயைபுச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்படாத கட்டிடங்கள் அனைத்தும் சட்டரீதியற்ற கட்டிடங்களாக கருதப்படும்

## 05 கட்டிட அனுமதிக்கட்டணங்கள் எவ்வாறு அறவிடப்படுகின்றது?

நகர அதிகார சபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயன்முறைக்கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்படுகின்றது

| தரைப்பகுதி | குடியிருப்பு உபயோகம் | | குடியிருப்பு அல்லாதது |
|---|---|---|---|
| | தனிப்பட்ட | அடுக்குமாடி இல்லங்கள் | |
| 400 வரை | 20.00 | 25.00 | 25.00 |
| 401-1000 | 22.00 | 27.00 | 27.00 |
| 1001-1500 | 25.00 | 30.00 | 30.00 |
| 1501-2000 | 25.00 | 32.00 | 32.00 |
| 2000க்கு மேல் | ஒவ்வொரு 90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2.000 | ஒவ்வொரு 90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2.000 | ஒவ்வொரு90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2.000 |

| | அளவீடு மற்றும் கட்டணம் | |
|---|---|---|
| கைப்பிடி சுவர்கள் அமைத்தல்/ தடுப்புச் சுவர்கள் | ஒரு மீட்டருக்கு. | 50.00 |
| அத்திவாரங்களுடன் எல்லைகளை வரையறுத்தல் | ஒரு மீட்டருக்கு. | 50.00 |
| தொடர்பு கோபுரங்கள்/ஆண்டெனா டவர்ஸ்/ டிரான்ஸ்மிஷன் கோபுரங்கள்ல் | 30000.00 | |

## 06. கட்டிட அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கான தண்டப்பணம் எவ்வளவு??

| கட்டிடம் /அமைத்தல் | குடியிருப்பு ஒரு சதுர மீட்டருக்கு (ரூ.) | குடியிருப்பு ஒரு சதுர மீட்டருக்கு (ரூ.) ஒரு சதுர மீட்டருக்கு வணிகம் மற்றும் பிற (ரூ.) |
|---|---|---|
| அஸ்திவாரப் பணிகள் மட்டுமே நிறைவடைநதுள்ளன (அடிமட்டம் வரை) | 200.00 | 500.00 |
| கூரை மட்டம் வரை கட்டுமானம் (கூரை தவிர) | 500.00 | 1000.00 |
| கூரை உட்பட கட்டுமானம் | 1000.00 | 2000.00 |
| கைப்பிடி சுவர்கள்/ எல்லைச் சுவர்கள் அமைத்தல் | 200.00 (ஒவ்வொரு நேரான மீட்டருக்கும்) | 500.00 (ஒவ்வொரு நேரான மீட்டருக்கும்) |

மேலதிக விபரங்களுக்கு